**கரன்தெனிய பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 30 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 ஜூன் 13 திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து கரன்தெனிய பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | முன்னைய ஆண்டு தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 212,912 தொகைக்கான சம்பளமற்ற விடுமுறை மீளாய்வாண்டிற்கான சம்பளம் மற்றும் வேதனங்கள் கணக்குகளுடன் கூட்டப்பட்டிருந்தது. | சரியான கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ஒரே தடவையில் பெறும் பணம் ரூபா 250,000 ஆண்டின் போது விடுவித்தலில் போது ஒரே முறையில் செலுத்தும் பணக் கணக்கிற்கு கணக்கீடு செய்வதற்குப் பதிலாக நிலுவை ஒரே முறையில் செலுத்தும் கணக்கிற்கு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | சரியான கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 12,351,877 இற்கான பங்களிப்புத் தொகையை கணக்கீடு செய்திருக்கவில்லை. | செலுத்த வேண்டிய பணத்தை கணக்கீடு செய்ய வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iv) | மீளாய்வாண்டு ஆயுர்வேத கூட்டுத்தாபனத்தினால் நன்கொடையாக கிடைத்திருந்த கூட்டுத்தொகை ரூபா 157,572 தொகை பெறுமதியான மருந்து இருப்பினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | நன்கொடை களை கணக்கீடு செய்ய வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) இணக்கங் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப் பட்டிருந்த 02 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகள் மற்றும் அட்டவணைகளில் காட்டப்பட் டுள்ள மீதிகளிடையே ரூபா 290,254 இற்கான வித்தியாசம் காணப்பட்டது. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீண்டகாலம் முதல் காணப்படும் சமமின்மைகள் என்பதால் எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப் படாமையால் கூட்டுத்தொகை ரூபா 228,909,037 தொகைக்கான 08 கணக்கு விடயங்களை திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஈ) போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைத் தீர்மானம் ஒன்றின் மீது 2015 ஆண்டு முதல் கடை வாடகை திருத்தப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 790,000 பதிவேடுகளில் இருந்து பதிவழிக்கப்பட்டுள்ளது. | திருத்தங்களுக் காக அதிகாரம் பெற்றுக்கொள்ள வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வேன். |

**1.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி ரூபா. | இணக்கமின்மை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவுகள் 134(1) மற்றும் (2) | -- | அதிகாரப் பிரதேசத்தில் முன்னேற்றப்பட்டுள்ள பிரதேசங்களை புதிய வீதவரி வலயங்கள் என இனங்கண்டு இருக்கவில்லை. | வீதவரி வலயங்கள் வெளியிடப்பட்டு வரி அறவீடு செய்து சபை நிதியத்தை வலுப்படுத்த வேண்டும். | எதிர்காலத்தில் வீதவரி அறவீடு செய்வேன். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | 14,668,437 | 02 வருட காலங்களை மிகைத்துள்ள வைப்பு மீதிகள் தொடர்பாக குறிப்பிட்ட நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 17,479,978 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 20,201,662 தொகை ஆகக் காணப்பட்டது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2018 மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2017 மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 4,424,801 | 1,814,748 | 1,718,542 | 4,486,259 | 2,778,641 | 1,847,690 | 1,597,267 | 4,424,801 |
| வாடகை | 7,608,495 | 5,809,826 | 4,639,494 | 8,774,252 | 8,145,400 | 7,378,600 | 6,447,742 | 7,608,495 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 123,350 | 154,250 | 154,250 | 123,350 | 300,000 | 235,986 | 235,986 | 123,350 |
| ஏனைய வரு மானங்கள் | 47,187,762 | 20,222,433 | 8,153,500 | 60,526,102 | 6,414,000 | 20,888,419 | 5,607,500 | 47,187,762 |
| | 59,344,408 | 28,001,257 | 14,665,786 | 73,909,963 | 17,638,041 | 30,350,695 | 13,888,495 | 59,344,408 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக அறவிடப்பட வேண்டிய மொத்த வருமானம் ரூபா 87,345,666 தொகை எனினும், ஆண்டிற்கான அறவீடுகள் ரூபா 14,665,786 தொகை அதாவது 17 சதவீதம் ஆகும். | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வருமானத்தை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.3 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரி** | | |
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 3,312,495 தொகையில் உப அலுவலகத்தில் மாத்திரம் ரூபா 10,000 மிகைத்துள்ள நிலுவை வீதவரி மீதி காணப்படும் 34 வரிசெலுத்துபவர் இருந்தனர். நிலுவை வீதவரி அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158(1)(அ) பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வருமானம் விரைவாக அறவிட வேண்டும். | எதிர்காலத்தில் வருமானத்தை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) நீர் வரி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஊரகஸ்மன்ஹந்திய நீர் செயற்திட்டத்தின் மூலம் ரூபா 706,125 இற்கான நிலுவை வரி காணப்பட்டது. | நிலுவை வரி அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.4 வாடகை வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 8,774,252 இற்கான நிலுவை மீதி காணப்பட்டதுடன், 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 158(1)(ஆ) பிரகாரம் நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வருமானத்தை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.5 அனுமதிப் பத்திரக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 03 வருடங்களை விட பழமை வாய்ந்த ரூபா 123,350 தொகைக்கான நிலுவை அனுமதிப்பத்திர மீதியொன்று தொடர்பாக தகவல்களை கண்டறிந்து நிலுவை தொகையை அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | அனுமதிப் பத்திரக் கட்டணம் செலுத்தப் படாத வியாபார நிலையங்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானத்தை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.6 ஏனைய வருமானங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 47,187,762 தொகைக்கான ஏனைய வருமானங்களின் நிலுவை மீதி மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 60,526,102 தொகை வரை வளர்ச்சி யடைந்திருந்ததுடன், அது முன்னைய ஆண்டுக்கு ஒப்பாக 28 சதவீத வளர்ச்சி அடைந்திருந்தது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விதிக்கப்பட்டிருந்த துணை விதியின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகள் தொடர்பாக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

#### (ஆ) கைவிடப்பட்ட செய்பணிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2006 ஆண்டின் போது தென்மாகாண விளையாட்டு அமைச்சின் மூலம் பாரிய பெறுமதியுடைய உடல்வளர்ச்சி விளையாட்டு பண்ட இருப்பொன்று சபைக்கு வழங்கியிருந்ததுடன், 2011 ஆண்டின் போது அந்த அமைச்சின் நிதி ஏற்பாடுகளின் மூலம் ரூபா 1,470,000 தொகை செலவிடப்பட்டு சபைக்கு சொந்தமான காணி ஒன்றில் உடல் ஆரோக்கிய, உடல் வளர்ச்சி நிலையம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. பௌதீக கணக்காய்வு பரிசோதனையின் போது மற்றும் சபையில் இருந்து கிடைத்த தகவல்களின் படி 2011 ஆண்டின் பின்னர் இந்த உபகரணங்கள் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டதுடன், இது தொடர்பாக தகவல் ஏதும் சபையில் காணப்படவில்லை. | உபகரணங்களை பதிவு செய்யப்பட வேண்டியதுடன் செயற்திட்டத்தின் மூலம் பிரதேச மக்களுக்கு சேவை ஒன்று பெற்றுக்கொடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் உபகரணங்களை பதிவு செய்து பொது மக்களுக்கு சேவைகளை வழங்க நடவடிக்கை எடுப்பேன். |

### (இ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையின் அதிகாரப் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் வகைப்படுத்தப்படாமல் நாளாந்தம் சேகரிக்கப்படும் குப்பை சுமார் 25 தொன்கள் புன்சி பொரகந்த தனியார் காணி ஒன்றில் போடப்பட்டு மண்போட்டு மூடப்படுகின்றது என அறிவித்திருந்த போதிலும், பௌதீக பரிசோதனையின் போது அவ்வாறு மண் போடப்படாமையால் காணியில் குப்பைகள் பரவிக்கிடந்தது. | குப்பைகள் அகற்றுவதற்காக முறையான நீண்டகால வேலைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | காணி ஒன்று பெற்று குப்பைகளை போடு வதற்கு எதிர்காலத்தில் வேலைத் திட்டம் ஒன்று செயற்படுத்துவேன். |

### (ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகலாவிய சுட்டிகள் மூலம் சபையின் அதிகாரப் பிரசேத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்டகாலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்திக் கான நீண்ட காலத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பொது மக்களின் வாழ்க்கை நிலை உயர்த்த வேண்டும். | அதிகாரப் பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்காக எதிர்காலத்தில் திட்டம் ஒன்று தயாரிக்கின்றேன். |

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | சபைக்குச் சொந்தமான பிரதான முன்பள்ளியான மஹஏதன்ட முன்பள்ளி 2015 ஆண்டு முதல் மூடப்பட்டு இருந்தது. | முன்பள்ளி உயிர்ப்புடன் நடாத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் முன்பள்ளியை உயிர்ப்புடன் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்னே. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2013 ஒக்தோபர் முதல் சேகரிக்கப் பட்டிருந்த பெறுமதி கூட்டிய வரி ரூபா 11,423,377 தொகை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை . | குறிப்பிட்ட வரியை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டும். | தற்போது செலுத்து வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ஒரே தடவையில் சேகரிக்கும் பணம் ரூபா 250,000 தொகை ஆண்டின் போது வருமானத்திற்கு எடுத்திருந்ததுடன், அதனை விடுவிக்கும் போது 2010 திசெம்பர் 27 ஆந் திகதிய தபபா/பபாகொ/2010/01 இலக்கங் கொண்ட உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கைக்கு முரணாக மீண்டும் டென்டர் பண்ணாமல் சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் மீண்டும் டென்டர் பண்ணுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்** | | |
| (i) மிகையாக காணப்பட்ட பதவிகளை முறைப்படுத்துவதற்கும் ஆரம்பப் பிரிவின் 10 பதவிகளின் வெற்றிடங் களை முறைப்பிரகாரம் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வெற்றிடங்களை முறைப்படி நிரப்பு வதற்கும் மிகைப் பதவிகளை முறைப் படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பதற்கும் மிகைப் பதவிகளை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) சபையின் அமைய மற்றும் பிரதியீட்டு அடிப்படையில் சேர்க்கப் பட்டிருந்த 09 ஊழியர்களுக்கு மீளாய்வாண்டின் போது சம்பளம் மற்றும் படியாக ரூபா 1,508,581 இற்கான தொகை சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது. | அமைய மற்றும் பிரதியீட்டு பதவி களை முறைப்படி நிரப்பப்பட வேண்டும். | எதிர்காலத்தில் முறைப்படி நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) ஊழியர் கடன்**

| | | |
|---|---|---|
| 48 ஊழியர்களினால் பெற்றுக்கொள்ளப் பட்ட அறவிடப்படாமல் காணப்படும் ரூபா 687,410 இற்கான கடன் மீதியை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை ஊழியர் கடன் அறவிடப்பட வேண்டும். | தகவல்களை கண்டறிந்து ஊழியர் கடன்களை அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான முன்பள்ளி சிறுவர் பூங்காவிற்காக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 315,500 தொகை செலவிடப்பட்டு, விளையாட்டு உபகரணம் 05 தொகுதிகள் பொருத்தப் பட்டிருந்ததுடன், இந்த முன்பள்ளி மூடப்பட்டமையால் முன்பள்ளி கட்டிடம் உட்பட மேசைகள், கதிரை, விளையாட்டு உபகரணங்கள் பயன்படுத் தப்படாமல் காணப்பட்டது. | பிரதேச மக்களுக்கு சேவை ஒன்றை வழங்க வேண்டும். | முன்பள்ளி ஆரம்பிக்கப் பட்டு பிரதேச மக்களுக்கு சேவை ஒன்று வழங்க நடவடிக்கை எடுப்பேன். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 07 செலவு விடயங்களின் கூட்டுத் தொகை ரூபா 30,660,733 இற்கான சேமிப்புக் காணப்பட்டதுடன், அந்தப் பெறுமதிகள் 21 சதவீதம் முதல் 47 சதவீதம் வரை இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த வருடம் இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | 04 வருமான விடயங்களில் நெருங்கி யிருக்காத இலக்குகளின் கூட்டுத் தொகை ரூபா 22,025,929 தொகையாக இருந்ததுடன் அப் பெறுமதி 21 சதவீதம் முதல் 61 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த வருடம் இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பேன். |

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 133 மற்றும் 134 இன் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரின் (தென்மாகாண) 2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய தபபா/யஹ/01/நா.ச.லே கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொண்டு இருக்காததுடன் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரிக்கும் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியினை வினவி இருக்கவில்லை. அதே போல் அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் உள்ளகக் கணக்காய்வு மேற் கொண்டு அறிக்கைகள் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |